CASE NO : CP 62/2025

NAME : PW1 – M. மீனாட்சி சுந்தரம்

DATE : 25.02.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முதுநிலை Checking inspector ஆக பணியாற்றினேன். கடந்த 30.04.2011 அன்று நான் பணி ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை 2010 ல் 12(3) ஊதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்க வேண்டிய அகவிலைப்படி மற்றும் சம்பளத்தொகையை உயர்த்தி பெறாமல் இருந்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய ஆய்வு பலன்களும் தள்ளி வைக்கப்பட்டதற்காக வழக்கு தொடர்ந்துள்ளேன். எனக்கு எந்த விதமான தண்டனைகளும் மற்றும் உத்தரவுகளும் வழங்கப்படவில்லை. தகுதியில்லா பணி நாட்கள் என்று தண்டனைகள் உள்ளதா என்றால் இல்லை. நான் பணியில் சேர்ந்த நான் 23.03.1980 என்றால் சரிதான். எனக்கு தகுதியில்லா பணி நாட்கள் 0.80 நாட்கள் இருந்ததால் தான் எனக்கு ஆய்வு பலன்கள் தள்ளி சென்றுள்ளது என்றும், என்னுடைய சம்பள கணக்கை எதிர்மனுதாரர் சரியாக கணக்கீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. 2013 ல் நான் ஓய்வு பெறும் சமயத்தில் என்னுடைய சம்பளத்தை உயர்த்தி தர வேண்டும் என்று எதிர்மனுதாரரிடம் நான் எதுவும் கேட்கவில்லை என்றால் தொழிற்சங்கத்தின் மூலம் எடுத்துரைத்தோம். Ex P1 ன் படி 30.04.2015ம் தேதியில் Inspector

க்கு ஊதியம் உயர்த்தி தர வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது என்றும் அதன் படி தான் எனக்கு ஊதியம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வித்தியாச தொகை ரூ. 3000/- குறைவாக வழங்கப்பட்டுள்ளது. Ex P2 ஆவணத்தின் படி மார்ச் 2013ல் எனக்கு வழங்கப்பட்ட சம்பளம் ரூ. 26,918/- ஆனால் எனக்கு கொடுக்க வேண்டிய சம்பளம் ரூ. 32,514/- வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வழங்கவில்லை. டிசம்பர் 2012 ல் என்னுடைய சம்பளம் ரூ. 16,240/- என்றால் சரிதான். டிசம்பர் 2012 க்கான என்னுடைய சம்பள பட்டியல் Ex R1. எனக்கு தண்டனைகள் வழங்கப்பட்டிருக்கிறது என்றும் அதனால் தான் என்னுடைய தகுந்த பணி பலன்கள் வழங்காமல் இருந்து வந்துள்ளது என்றால் சரியல்ல. எனவே இந்த கணக்கீட்டு மனு தோராயமானது என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.